# மின் கம்பங்களை சீரமைக்க ரூ. 2.80 கோடி

## மாநகராட்சிக்கு மெட்ரோ நிர்வாகம் வழங்கியது

**சென்னை, செப். 26–**

மெட்ரோ பணியால் சேதமடைந்த தெரு கம்பங்கள், விளக்குகள் அமைக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம், 2.80 கோடி ரூபாயை, மாநகராட்சிக்கு கொடுத்து உள்ளது.

சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, சென்ட்ரலுக்கும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., முதல், வண்ணாரப்பேட்டை வரை, மெட்ரோ ரயில் சுரங்கபாதை பணிகள் நடைபெற்று வருகின்றன.

மெட்ரோ ரயில் பணிகளால் சேதமடைந்த, தெரு கம்பங்கள் மற்றும் விளக்குகளை சீரமைக்க, சென்னை மாநகராட்சிக்கு, 2.80 கோடி ரூபாயை, மெட்ரோ ரயில் நிர்வாகம் வழங்கியுள்ளது.

மாநகராட்சி உயர் அதிகாரி கூறிய தாவது:

மெட்ரோ ரயில் பணிகளுக்காக அகற்றப்படும் மற்றும் சேதமடையும் தெரு கம்பங்கள், விளக்குகளை, புதிதாக அமைப்பதற்கான தொகையை, மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்றுள்ளது.

அதன்படி, பணி முடிந்த இடங்களில், புதியதாக ஒயர், கம்பங்கள், விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கு வைப்பு தொகையாக, 2.80 கோடி ரூபாயை, மெட்ரோ ரயில் நிர்வாகம் அளித்துள்ளது.

இதில், பூந்தமல்லி நெடுஞ்சாலையில், நேரு பூங்கா முதல், பச்சையப்பன் கல்லூரி வரை, 30 லட்சம் ரூபாய் செலவில், தெரு கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்ணா சாலையில், நந்தனம் முதல், டி.எம்.எஸ்., வரை, 1.02 கோடி ரூபாயில் பணிகள் முடிந்துள்ளன. தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையில், 1.48 கோடி ரூபாயில் பணிகள் துவங்க உள்ளன.

சைதாப்பேட்டை பகுதியில், மின்கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைக்க, 45 லட்சம் ரூபாயை கேட்டுள்ளோம். விரைவில் வழங்குவதாக, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.